MAY 2024 **P/ID 28512/PCM1A**

Time : Three hours Maximum : 80 marks

PART A — (10 × 2 = 20 marks)

Answer any TEN questions.

1. Mention various types of shares.
பங்குகளை வகைப்படுத்துக.

2. Define debenture.
கடன் பத்திரம் வரைவிலக்கணம் தருக.

3. What do you understand by Goodwill?
நற்பெயர் பற்றி நீர் அறிவது என்ன?

4. Write note on super profit.
அதிக லாபம் பற்றி சிறு குறிப்பு எழுதுக.

5. What is acquisition of business?
தொழில் நிறுவனத்தை வாங்குதல் என்றால் என்ன?

6. What do you mean by net asset method?
நிகர சொத்துக்கள் முறை என்றால் என்ன?

7. Write a short note on yield method.
ஈட்டு மதிப்பு முறை பற்றி சிறு குறிப்பு வரைக.

8. What is cost of control?
கட்டுப்பாடு கிரயம் என்றால் என்ன?

9. Give note on revenue profit.
வருவாய் லாபம் பற்றி குறிப்பு தருக.

10. What do you mean by underwriter?
விற்பனை உத்திரவாதம் கொடுப்பவர் பற்றி நீ அறிவது என்ன?

11. What is reserve fund?
காப்பு நிதி என்றால் என்ன?

12. Give the meaning of statutory reserve.
சட்டபூர்வ இருப்பு பொருள் தருக.

PART B — ($5 \times 6 = 30$ marks)

Answer any FIVE questions.

13. White house ltd. Issued 20,000 share of Rs.50 each at a discount of Rs.2 per share which is payable as follows:

On Application	Rs.15
On Allotment	Rs.20
On 1st and final call	Rs.13

Applications were received for 18,000 shares. All money due were received excepting the call money on 600 share which were forfeited. Out of these 400 shares were reissued at Rs.40 per share as fully paid up. Prepare journals.

வெள்ளைக் குதிரைலிமிட் ரூ.50 முகமதிப்புள்ள 20,000 பங்குகளை பங்கு ஒன்றிற்கு ரூ.2 தள்ளுபடியில் வெளியிட்டது. தொகையை கீழ்கண்டவாறு செலுத்த வேண்டும்.

விண்ணப்பத்தின் போது	ரூ.15
ஒதுக்கீட்டின் போது	ரூ.20
முதல் மற்றும் இறுதி அழைப்பு	ரூ.13

18,000 பங்குகளுக்கு, விண்ணப்பம் பெறப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்டது. 600 பங்கிற்கான முதல் மற்றும் இறுதி அழைப்பு தொகை நீங்கலாக பிறத்தொகைகள் அனைத்தும் பெறப்பட்டது. பின்னர் இப்பங்குகள் பறிமுதல் செய்யப்பட்டு ஒறுப்பிழப்பு செய்யப்பட்டது. பின்னர் இப்பங்குகளில் 400 பங்குகள் பங்கு ஒன்றுக்கு ரூ.40 வீதம் முழுத்தொகையும் செலுத்தப்பட்டதாக வெளியிடப்பட்டது. முதல் பதிவு தயாரிக்கவும்.

14. Define goodwill what are the different methods of calculation of goodwill.

நற்பெயர் வரையறு – நற்பெயர் கணக்கிடும் பலவகையான முறைகளை விளக்கவும்.

15. From the following particulars calculate the value per equity share:

5,000 8% preference share of Rs.100 each Rs.5,00,000

75,000 ordinary share of Rs. 10 each Rs.8 per share paid up Rs.6,00,000

Expected profits per year before tax Rs.2,80,000

Rate of tax 50%

Transfer to general reserve every year 20% of profit

Normal rate of earning 10%.

கீழ்காணும் விவரங்களிலிருந்து, சாதாரண பங்கு ஒன்றின் மதிப்பைக் கண்டுபிடிக்கவும்.

5,000, 8% சதவீத முன்னுரிமைப் பங்குகள் ஒவ்வொன்றும் ரூ.100 வீதம் ரூ.5,00,000

75,000 ரூ.10 மதிப்புள்ள சாதாரணப் பங்குகள் ஒவ்வொரு பங்குக்கும் ரூ.8 செலுத்தியது ரூ.6,00,000

வரிக்கு முன் எதிர்பார்க்கப்பட்ட லாபம் (ஒரு வருடத்திற்கு) ரூ.2,80,000

வரி வீதம் 50%

பொதுக்காப்புக்கு ஆண்டு தோறும் மாற்றப்பட்டது லாபத்தில் 20%

சாதாரண வருமான வீதம் 10%.

16. The following scheme of reconstruction was approved by Royal ltd.

(a) The shareholder to receive in lieu of their present holding of 50,000 share of Rs.10 each, the following:

(i) Fully paid ordinary share equal to 2/5 of their holding

(ii) 5% preference share to the extent of 1/5 of the above ordinary share

(iii) Rs.60,000, 6% debentures

(b) The goodwill which stood at Rs.3,00,000 was written down to Rs.1,50,000

(c) Plant and building were written down by Rs.20,000 and Rs.30,000 respectively.

Pass journal entries.

கீழ்க்காணும் மறுசீரமைப்புத் திட்டத்தை ராயல் நிறுமம் அனுமதித்துள்ளது :

(அ) 50,000 பங்குகள் ரூ.10 வீதம் வைத்துள்ள பங்குதாரர்கள் கீழே குறிப்பிட்டுள்ளதைப் பெறுகிறார்கள்

(i) அவர்கள் வைத்துள்ளதில் 2/5 பங்கு முழுமையாக செலுத்தப்பட்ட சாதாரணப் பங்கு முழுமையாக செலுத்தப்பட்ட சாதாரணப் பங்குகளை பெறுகிறார்கள்

(ii) 1/5 பங்கு மேற்சொல்லப்பட்ட சாதாரணப் பங்குகளில், 5% முன்னுரிமைப் பங்குகள் பெறுகிறார்கள்

(iii) ரூ.60,000 மதிப்புள்ள, 6% கடன் பத்திரங்கள்

(ஆ) ரூ.3,00,000 மதிப்புள்ள நற்பெயர் ரூ.1,50,000க்கு குறைக்கப்பட்டது

(இ) பொறி மற்றும் கட்டிடங்கள் முறையே ரூ.20,000 மற்றும் ரூ.30,000 குறைக்கப்பட்டன.

குறிப்பேட்டுப் பதிவுகளை தருக.

17. A Ltd., Went into liquidation with the following liabilities

(a) Secured creditors (securities realized Rs.25,000) Rs.20,000

(b) Preferential creditors Rs.600

(c) Unsecured creditors Rs.30,500

(d) Liquidation expenses Rs.252.

The liquidator is entitled to remuneration of 3% on the amount realized (including securities in the hands of secured creditors) and 1.5% on the amounts distributed to unsecured creditors. The various assets (excluding securities in the hands of secured creditors) realized Rs.26,000.

Prepare the liquidators final account.

A லிமிடெட் கீழ்க்கண்ட பொறுப்புகளுடன் கலைக்கப்பட்டது.

(அ) பிணையம் பெற்ற கடனீந்தோர்கள் (பிணையங்கள் விற்கப்பட்டது ரூ.25,000) ரூ.20,000

(ஆ) முன்னுரிமை கடனீந்தோர்கள் ரூ.600

(இ) பிணையம் பெறா கடனீந்தோர்கள் ரூ.30,500

(ஈ) கலைப்புச் செலவுகள் ரூ.252.

கலைப்பாளர் விற்ற தொகையின் மீது (பிணையம் பெற்ற கடனீந்தோர்களிடமிருக்கும் பிணையங்கள் சேர்த்து) 3 சதவீதமும் பிணையம் பெறா கடனீந்தோர்களுக்கு பகிர்ந்தளிக்கும் தொகைகளின் மீது 1.5% சதவீதமும் ஊதியம் பெற உரிமை பெறுகிறார். பல்வேறு சொத்துக்கள் (பிணையம் பெற்ற கடனீந்தோர்களிடமிருக்கும் பிணையங்கள் சேர்க்காமல்) விற்றது ரூ.26,000.

கலைப்பாளரின் இறுதிக் கணக்கினைத் தயாரிக்கவும்.

18. The Sun co. Ltd acquired 18,000 equity share in the Moon Co. Ltd., on 31st December 1996. On the date the balance sheets of the two companies were:

	Sun Co.Ltd. Rs.	Moon Co.Ltd. Rs.		Sun Co.Ltd. Rs.	Moon Co.Ltd. Rs.
Share capital			Sundry assets	3,10,000	3,20,000
Equity share of Rs.10 each	4,00,000	3,00,000	Investment: Share in moon Co. ltd.		
Profit & loss a/c	80,000	–	18,000 at cost	1,80,000	–
Creditors	10,000	20,000			
	4,90,000	3,20,000		4,90,000	3,20,000

Prepare consolidated Balance Sheet.

31 டிசம்பர் 1996 அன்று சன் கம்பெனி மூன் கம்பெனியின் நேர்மை பங்குகள் 18,000 ஐ வாங்கியது. அந்த நாளில் இரு கம்பெனிகளின் இருப்பு நிலைக் குறிப்பு கீழ்கண்டவாறு இருந்தது.

	சம் கம்பெனி ரூ.	மூன் கம்பெனி ரூ.		சம் கம்பெனி ரூ.	மூன் கம்பெனி ரூ.
பங்கு முதல் : நேர்மை பங்குகள் ரூ.10 வீதம்	4,00,000	3,00,000	பல்வகை சொத்துக்கள்	3,10,000	3,20,000
இலாப நட்ட க/கு	80,000	–	முதலீடுகள் : மூன் கம்பெனி பங்குகள் 18,000		
கடனீந்தோர்கள்	10,000	20,000	அடக்கம்	1,80,000	–
	4,90,000	3,20,000		4,90,000	3,20,000

ஒருங்கிணைந்த இருப்புநிலை குறிப்பு தயார் செய்க.

19. The revenue a/c of Bajaj life insurance company showed a balance of Rs.4,75,000 at the end of the year 2000 before taking the following adjustments;

(a) Bonus utilized in reduction of premium Rs.45,000

(b) Outstanding premium Rs.1,00,000

(c) Interest accrued on investment less income tax Rs.25,000

(d) Claims intimated but not yet admitted Rs.30,000

(e) Claims covered under reinsurance Rs.5,000.

Find the true balance.

பஜாஜ் ஆயுள் காப்பீட்டு நிறுமம் தனது வருவாய் கணக்கின் இருப்புத் தொகையை 2000ம் ஆண்ட இறுதியில் ரூ.4,75,000 என கணக்கிட்டது. கீழ்க்காணும் சரிகட்டுதல்களுக்கு முன்பாக :

(அ) முனைமத் தொகை மூலம் அளிக்கப்பட்ட மிகை ஊதியம் ரூ.45,000

(ஆ) முனைம நிலுவைத் தொகை ரூ.1,00,000

(இ) வருமான வரி நீக்கி முதலீட்டின் மீது வட்டி சேர வேண்டியது ரூ.25,000

(ஈ) கோருரிமை தெரிவிக்கப்பட்டது இன்னும் கொடுக்கப்படவில்லை ரூ.30,000

(உ) மறுகாப்பீட்டு கோருரிமை ரூ.5,000

உண்மை இறுதி இருப்பை காண்க.

PART C — (3 × 10 = 30 marks)

Answer any THREE questions.

20. N Ltd. Issued 20,000 shares of Rs.10 each at a premium of Rs.2 payable of follows:

On application Rs.2

On allotment Rs.5

On first call Rs.2

On final call Rs.3

Applications for 15,000 shares were received and all these were allotted. The first call was made and the amount due thereon was received except the amount on 500 share. Hence these shares were forfeited and reissued at Rs.7 each.

Pass journal entries and Balance sheet.

N லிமிடெட் 20,000 சாதாரண பங்குகள் பங்கு ஒன்று ரூ.10 வீதம் ரூ.2 முனைமத்தில் வெளியிட்டது. விண்ணப்பத்துடன் ரூ.2ம் ஒதுக்கீட்டின் போது ரூ.5ம் (முனைமம் உட்பட). முதல் அழைப்பின் போது ரூ.2ம் மற்றும் இறுதி அழைப்பின் போது ரூ.3ம் பெறுவதாக உள்ளது.

15,000 விண்ணப்பங்கள் பெறப்பட்டது. அவை அனைத்தும் முழுவதுமாக ஒதுக்கீடு செய்யப்பட்டது. முதல் அழைப்பு கோரப்பட்டது. 500 பங்குகளுக்கென அழைப்புத் தொகை தவிர மீதி அனைத்தும் முறையாக பெறப்பட்டது. எனவே இப்பங்குகள் ஒறுப்பிழப்பு செய்யப்பட்டது. அவற்றை ரூ.7 வீதம் மீண்டும் வெளியிடப்பட்டது.

தேவையான முதற்குறிப்பேட்டுப் பதிவுகள் மற்றும் இருப்பு நிலைக் குறிப்பு தயாரிக்க.

21. Explain various methods of valuation of shares.

சாதாரண பங்கு மதிப்பீடு செய்யும் பல்வேறு முறைகளை விவரி.

22. Z ltd. went into voluntary liquidation on 31st Dec.2003 with the following balance sheet.

Equity capital	5,00,000	Fixed assets	6,00,000
Preference capital	2,00,000	Current assets	7,00,000
P/L a/c	1,00,000		
Creditors	2,00,000		
Bank O/D (with a charge on fixed assets)	3,00,000		
	13,00,000		13,00,000

The assets were realized by the liquidator as follows :

2004	Fixed assets	Current assets
Feb.1	Rs.1,00,000	Rs. 2,00,000
March 1	Rs.3,00,000	Rs.2,00,000
April 1	Nil	Rs.1,00,000

The liquidator is entitled to a commission of 5% on assets realized and to 2% of amount distributed among equity shareholders. After reserving Rs.20,000 for expenses (which ultimately amounted to Rs.16,000) the amounts were distributed as sand when received. Prepare the liquidator account.

கீழ்காணும் இருப்பு நிலைக் குறிப்புடன் டிசம்பர் 31, 2003-ல் Z நிறுவனம் தன்விருப்ப கலைப்பு செய்யப்பட்டது.

சாதாரணப் பங்குகள்	5,00,000	நிரந்தர சொத்துக்கள்	6,00,000
முன்னுரிமைப் பங்குகள்	2,00,000	நடப்பு சொத்துக்கள்	7,00,000
லா/ந க/கு	1,00,000		
கடனீந்தோர்	2,00,000		
வங்கி மேல்வரைப்பற்று (நிரந்தர சொத்துக்கள் மீது பிணையம்)	3,00,000		
	13,00,000		13,00,000

கலைப்பாளருக்கு சொத்துக்கள் மூலமாக கீழ்கண்டவாறு தொகைகள் கிடைத்தன :

2004	நிரந்தர சொத்துக்கள்	நடப்பு சொத்துக்கள்
பிப்ரவரி 1	1,00,000	2,00,000
மார்ச் 1	3,00,000	2,00,000
ஏப்ரல் 1	இல்லை	1,00,000

கலைப்பாளருக்கு கழிவாக 5% சொத்துக்கள் மூலமாக கிடைத்ததில் மேலும் சாதாரண பங்குதாரர்களுக்கு கிடைக்கும் தொகையில் 2% செலவாக ரூ.20,000 எடுத்துக் கொண்ட பின்பு (இவையின் இறுதித் தொகை ரூ.16,000) அவ்வவ்போது கிடைக்கும் தொகைகளை அவ்வப்போது பிரித்துக் கொடுத்து விடவும்.

கலைப்பாளரின் கணக்கை தயார் செய்யவும்.

23. From the balance sheet and information given below prepare consolidated balance sheet

Liabilities	H Ltd	S Ltd	Assets	H Ltd	S Ltd
	Rs.	Rs.		Rs.	Rs.
Share capital			Sundry assets	8,00,000	1,20,000
Rs. 10 fully paid	10,00,000	2,00,000	Stock	6,10,000	2,40,000
P/L a/c	4,00,000	1,20,000	Debtors	1,30,000	1,70,000
Reserve	1,00,000	60,000	B/R	10,000	–
Creditors	2,00,000	1,20,000	Share in S		
Bills payable	–	30,000	(15,000 at cost)	1,50,000	–
	17,00,000	5,30,000		17,00,000	5,30,000

(a) All the profit of S has been earned since the share were acquired by H but there was already reserve of Rs. 60,000 at that date.

(b) The bills accepted by S Rs. 10,000 are in favour of H

(c) Sundry assets of S are undervalued by Rs. 20,000

(d) The stock of H includes of Rs. 50,000 bought from S at a profit to the later of 25% on cost.

கீழ்காணும் இருப்புநிலை குறிப்பு மற்றும் தகவல்களைக் கொண்டு ஒருங்கிணைந்த இருப்பு நிலை குறிப்பு தயார் செய்க.

பொறுப்புகள்	H லிமிட்	S லிமிட்	சொத்துக்கள்	H லிமிட்	S லிமிட்
	ரூ.	ரூ.		ரூ.	ரூ.
பங்கு முதல்			பற்பல		
ரூ.10 வீதம்			சொத்துக்கள்	8,00,000	1,20,000
முழுவதும் செலுத்தியது	10,00,000	2,00,000	சரக்கிருப்பு	6,10,000	2,40,000
லா/ந க/கு	4,00,000	1,20,000	கடனாளிகள்	1,30,000	1,70,000
காப்பு	1,00,000	60,000	பெ.மா.சீ	10,000	–
கடனீந்தோர்	2,00,000	1,20,000	S நிறுமத்தில்		
செலுத்துதற்குரிய			பங்குகள்		
மாற்றுச் சீட்டு	–	30,000	(15,000 அடக்க விலையில்)	1,50,000	–
	17,00,000	5,30,000		17,00,000	5,30,000

(அ) S நிறுமத்தின் அனைத்து லாபமும் H நிறுமத்தால் பங்குகள் வாங்கிய பின் தான் ஈட்டப்பட்டது. ஆனால் ஏற்கனவே ரூ.60,000-க்கான காப்பு அந்த தேதியில் இருந்தது

(ஆ) S நிறுமத்தால் ஏற்கப்பட்ட மாற்றுச்சீட்டு ரூ.10,000 H நிறுமத்திற்கு சார்ந்தது

(இ) S நிறுமத்தின் பற்பல சொத்துக்கள் குறைத்து மதிக்கப்பட்ட அளவு ரூ.20,000

(ஈ) H நிறுமத்தின் ரூ. 50,000 மதிப்பான சரக்கிருப்பு S நிறுமத்திலிருந்து கொள்முதல் செய்யப்பட்டது. இது பின்னர் குறிப்பிட்ட நிறுமத்திற்கு அடக்கவிலையில் 25% லாபம்.

24. Moon and star co.. Ltd is a company with authorized capital of Rs.5,00,000 divided into 5,000 equity share of Rs.100 each on 31.12.1985 of which 2,500 share were fully called up. The following are the balance extracted from the ledger as 31.12.1985.

Final Trial Balance

Debit	Rs.	Credit	Rs.
Opening Stock	50,000	Sales	3,25,000
Purchases	2,00,000	Discount received	3,150
Wages	70,000	Profit and Loss A/c	6,220
Discount allowed	4,200	Creditors	35,200
Insurance	6,720	Reserves	25,000
Salaries	18,500	Loan from Managing director	15,700
Rent	6,000	Share Capital	2,50,000
General expenses	8,950		
Printing	2,400		
Advertisement	3,800		
Bonus	10,500		
Debtors	38,700		
Plant	1,80,500		
Furniture	17,100		
Bank	34,700		
Bad debts	3,200		
Calls-in-arrears	5,000		
	6,60,270		6,60,270

You are required to prepare statement of profit & loss for the year ended 31.12.1985 and a balance sheet as on the date. The following further information is given :

(a) Closing stock was valued at Rs.1,91,500

(b) Depreciation on plant at 15% and on furniture at 10% should be provided.

(c) A tax provision of Rs. 8,000 is considered necessary.

(d) The directors declared an interim dividend on 15.8.85 for 6 months ending June 30, 1985 @ 6%

(e) Provide for corporate dividend tax @17%.

பங்கு ஒன்று ரூ.100 வீதம் 5,000 நேர்மைப் பங்குகளை உள்ளடக்கி ரூ.5,00,000 ஒப்பிய மூலதனமாக கொண்ட மூன் லிமிடெட் எனும் நிறுமத்தில் 31.12.1985ல் அன்று 2500 பங்குகள் முழுவதும் செலுத்தப்பட்டதாக இருந்தது. 31.12.1985 அன்று அந்நிறுவனத்தின் பேரேட்டிலிருந்து கீழ்க்காணும் இருப்புகள் எடுக்கப்பட்டன :

இருப்பு சோதனை பட்டியல்

பற்று	ரூ.	வரவு	ரூ.
ஆரம்ப சரக்கிருப்பு	50,000	விற்பனை	3,25,000
கொள்முதல்	2,00,000	தள்ளுபடி பெற்றது	3,150
கூலி	70,000	இலாப-நட்ட க/கு	6,220
தள்ளுபடி அளித்தது	4,200	கடனீந்தோர்	35,200
காப்பீடு	6,720	காப்பு	25,000
சம்பளம்	18,500	மேலாண்மை இயக்குநரிடமிருந்து கடன்	15,700
வாடகை	6,000	பங்கு முதல்	2,50,000
பொது செலவுகள்	8,950		
அச்சு	2,400		
விளம்பரம்	3,800		
ஊக்க ஊதியம்	10,500		
கடனாளிகள்	38,700		
பொறி	1,80,500		
தளவாடங்கள்	17,100		
வங்கி	34,700		
வாரக் கடன்	3,200		
அழைப்பு நிலுவை	5,000		
	6,60,270		6,60,270

31.12.1985 ம் தேதியுடன் முடிவடையக் கூடிய ஆண்டிற்கான இலாப நட்டக் கணக்கையும் அதே தேதியில் இருப்பு நிலைக் குறிப்பையும் தயார் செய்க. இதர விபரங்கள் பின்வருமாறு :

(அ) இறுதி சரக்கிருப்பு ரூ.1,91,500

(ஆ) பொறியின் மீது 15% மற்றும் தளவாடங்கள் மீது 10% ம் தேய்மானம்.

(இ) வரி ஒதுக்கீடு ரூ.8,000 க்கு தேவை என உணரப்பட்டது

(ஈ) 15.8.85 அன்று இயக்குநர்கள் ஜூன் 30, 1985 வரையான ஆறு மாத காலத்திற்கு இடைப்பட்ட பங்காதாயம் 6% என அறிந்தனர்.

(உ) நிறும பங்காதாய வரி 17% உருவாக்குக.